දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

| | | |
|---|---|---|
| අමාත්‍යතුමා<br>அமைச்சர்<br>Minister | } | 2784832<br>2784807<br>2784825 |
| ලේකම්<br>செயலாளர்<br>Secretary | } | 2784812 |
| කාර්යාලය<br>அலுவலகம்<br>Office | } | 2785141-50<br>Fax: 2784846 |

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/101/06/3/1

දිනය / திகதி / Date } 2013.05. 31

<u>சுற்றறிக்கை இலக்கம் - 22/2013</u>

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
கல்விப் பணிப்பாளர்கள் (கணிதம்)
மாகாண / வலய கணித பாடத்திற்குப் பொறுப்பான பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
கணித ஆசிரிய ஆலோசகர்கள்
அதிபர்கள்.

## <u>வருடாந்த தேசிய கணிதப் போட்டித் தொடர்</u>

ஒவ்வொரு ஆண்டிலும் கல்வி அமைச்சின் கணிதக் கிளையின் ஒருங்கிணைப்புடன் தேசிய கணிதப் போட்டித் தொடரை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய தேசிய கணித அறிவுக் களஞ்சியப் போட்டித்தொடர் மற்றும் தேசிய கணித நாடகப் போட்டித் தொடரின் தேசிய மட்டத்தில் போட்டிகள் நடைபெறும் முறைகள் வலய மற்றும் மாகாண மட்டத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டதன் பின்னர் அவ்வவ் போட்டிகளுக்காக மாகாணத்தைப் பிரநிதித்துவப்படுத்தும் மாணவர் குழுக்களுக்கு அதில் பங்கேற்கச் செய்யக் கூடிய முறைகள் தொடர்பாக இச் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்படுகின்றது.

### 1.0. தேசிய கணிதப் போட்டித்தொடரை அறிமுகப்படுத்தல்

நாட்டின் சகல பாடசாலைகளிலும் கணிதப்பாடத்தை மாணவ மாணவிகளின் அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்காகவும் அவர்களின் பிரயோக இயலுமைகளை வெளிப்படுத்துவதற்காகவும் கணித அறிவுக்களஞ்சியப் போட்டித் தொடர் மற்றும் கணித நாடகப் போட்டித் தொடர் என்ற அடிப்படையில் இப் போட்டித் தொடர் கல்வி அமைச்சின் கணிதக் கிளையினால் 2011 அண்டு தொடக்கம் ஒழுங்கு செய்து நடாத்தப்படுகின்றது. இதன் போது ஒரு வருடத்திற்கு 1000 மேற்பட்ட மாணவர்கள் தமது திறமைகளைக் காண்பிப்பதுடன் உரிய ஆசிரியர்கள் தமது ஆக்கத்திறன் விருத்தியிற்காக சிறந்த பயனைப் பெறுகின்றனர். தேசிய கணித நாடகப் போட்டித் தொடரில் வெற்றியீட்டும் நாடகத்தை தேசிய தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்புவதால் அந்நாடகத்தை பார்வை இடுவதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு விருப்பத்துடன் கணிதப் பாடத்தைக் கற்க ஆர்வமூட்டுவதற்கும் மாணவர்களிடையே கணிதப் பாடத்தைப் பிரபல்யப்படுத்தவும் முடிந்துள்ளது. ஆண்டுதோறும் நவீன முறைகளைப் பயன்படுத்தி நடாத்தப்படும் இப் போட்டித் தொடர்

காரணமாக கணிதப் பாட சிக்கல்கள், ஆழம், விருப்பமின்மை, விளங்கிக் கொள்வதற்கு சிரமம் ஆகியன தொடர்பில் மாணவர்கள் மத்தியில் சிந்தனை விருத்திகளை மேற்கொண்டு கணிதத்தின் இலகுதன்மை, கலைசார் தன்மை, விருப்பத்தினை அதிகரித்து பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை யதார்த்த பூர்வமாக்க முடிந்துள்ளது. விசேடமாக மெதுவாகக் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையே கணிதப் பாடத்தினை விருப்பத்திற்குரிய பாடமாக மாற்றியமைப்பதற்கும் இதன் மூலம் வாய்ப்புக் கிடைத்துள்ளது. மேலும் ஆசிரியர்களுக்கிடையே ஒத்துழைப்பினையும் நல்லுறவினையும் விருத்தி செய்யக் கூடிய போட்டித் தொடராக மாற்றம் பெற்றுள்ளது. வெற்றி தோல்வியினைச் சமமாகப் பகிர்ந்துகொள்ளுதல் போன்ற சிறந்த மனிதாபிமானப் பண்புகளை விருத்தி செய்யும் இப்போட்டித் தொடர் கீழ்க்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை எட்டுவதற்காக வருடம் தோறும் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 1.1. தேசிய கணிதப் போட்டித் தொடரின் பொதுவான நோக்கங்கள்

1. கணிதத்தின் மீதான விருப்பமின்மை தொடர்பாக மாணவர்களின் சிந்தனைகளை மாற்றியமைத்து கணிதத்தை விருப்பத்திற்குரிய பாடமாக்குதல்.
2. மெதுவாகக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விருப்பத்துடன் கணித பாடத்தினைக் கற்பதற்காக சந்தர்ப்பம் வழங்குதல்.
3. சம்பிரதாய கணிதக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் புறம்பாக பல்வேறுபட்ட கற்கைக்கான சந்தர்ப்பத்தினை அறிமுகப்படுத்தல் மற்றும் அவற்றை எதிர்கால சந்ததியினருக்காகப் பொறுப்பளித்தல்.
4. மாணவர்களின் ஆளுமை விருத்திக்காக அறிவுசார் விருத்தி, இரசனைசார் விருத்தி, மனோவியல் விருத்தி, திறமை விருத்தி மற்றும் ஆக்கத்திறன் விருத்தியினை கணிதப் பாடத்தின் ஊடாக மேற்கொள்ளல்.
5. சகல மாணவர்களுக்கும் பாடத்துக்குப் புறம்பாக கணித பாட விருத்திக்காக கவனம் செலுத்தும் போது மாற்று சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் வெற்றி தோல்வியினை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கினையும் மாணவர்களுக்குப் பழக்குதல்.

## 2.0. தேசிய கணிதப் போட்டித் தொடர் தொடர்பான விபரங்கள் மற்றும் பொதுவான சட்ட ஒழுங்குகள்

தேசிய கணிதப் போட்டித் தொடரானது தேசிய கணித அறிவுக் களஞ்சியப் போட்டித் தொடர் மற்றும் தேசிய கணித நாடகப் போட்டித் தொடர் ஆகிய இரு போட்டித் தொடர்களைக் கொண்டமைந்துள்ளது. தேசிய கணித அறிவுக் களஞ்சிய போட்டித் தொடர் தொடர்பாக இலக்கம் 2.2 இன் கீழ் மற்றும் தேசிய கணித நாடக போட்டித் தொடர் தொடர்பாக இல. 2.3 இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ளதுடன் இரு போட்டித் தொடருக்கும் உரியதான பொது ஆலோசனைகள் இல. 2.1 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணிதப் போட்டித் தொடர் நடைபெறும் இடம் மற்றும் திகதி தொடர்பாக கல்வி அமைச்சின் கணிதக் கிளையினால் தீர்மானிக்கப்படும். சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சீர்திருத்தப்படும் பட்சத்தில் அது தொடர்பாக ஆண்டின் ஆரம்பத்தில் தீர்மானித்து அறிவிக்கப்படுவதுடன் அதற்குரிய விபரங்கள் மற்றும் ஆலோசனைகள் தேசிய போட்டித் தொடர் ஆரம்பிக்கும் தினத்திற்கு நான்கு மாதங்களிற்கு முன்னர் அறிவிக்கப்படும்.

2.1. பொதுவான ஆலோசனைகள்

- தேசிய கணித அறிவுக் களஞ்சியப் போட்டித் தொடருக்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் தனித்தனியாக நடத்தாது, கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட மட்டத்திலான இரு நிகழ்ச்சிகளின் கீழ் ஒரு நிகழ்ச்சியில் ஒரு பிரிவு வீதம் மாகாணத்தில் இரு குழுக்கள் பங்குபற்ற முடியும். இதற்கு மேலதிகமாக தேசிய கணித நாடகப் போட்டித் தொடருக்காக கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட ஆகிய இரு நிகழ்ச்சிகளின் கீழும், சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் ஒரு மாகாணத்தில் இருந்து நான்கு நாடகங்கள் வீதம் நாடகக் குழுக்களுக்குத் தோற்ற முடியும்.

- தேசிய மட்டத்தில் பங்குபற்றும் குழுக்களைத் தேர்ந்தெடுப்பதற்காக உரிய மாகாணங்களில் இப் போட்டித் தொடரின் பொது நோக்கம் மற்றும் அவ்வப் போட்டித் தொடரின் கீழான விசேட நோக்கங்களுக்கு ஏற்றவாறு வலய மட்டத்தில் மற்றும் மாகாண மட்டத்தில் போட்டிகள் ஒழுங்கு செய்யப்படும்.

- இதற்குரிய சகல வலய மற்றும் மாகாணப் போட்டிகளில் மாகாண கணித பாட இணைப்பு உத்தியோகத்தரினால் ஒழுங்கு செய்யப்படுவதுடன் போட்டித் தொடரின் பொதுவான நோக்கங்களை எட்டுவதற்காக வலயத்தின் உயர்ந்தபட்ச பாடசாலை எண்ணிக்கை போட்டித் தொடரில் பங்கேற்கச் செய்ய வலய கணித பாடத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் வலயத்தினால் இனங்காணப்பட்ட பாடசாலைகளின் போட்டிக் குழுவினை பயிற்றுவித்து பங்கேற்கச் செய்யும் முழுமையான பொறுப்பு பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்குரியதான ஆலோசனைகளை கணித ஆசிரிய ஆலோசகர்கள் வழங்குதல் வேண்டும்.

- வலயப் போட்டிகள் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணப் போட்டிகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் பணிக்கப் பட்டுள்ள நேர அட்டவணைக்குள் மேற்கொண்டு பூர்த்தி செய்ய வேண்டும்.

- வலய மற்றும் மாகாண மட்டத்தின் சகல போட்டிகளினதும் பெறுபேறுகள் அப்போட்டி நடாத்தப்படும் தினங்களில் வழங்கப்படுதல் வேண்டும். இதன் போது நடுவர் சபையினால் வழங்கப்படும் தீர்மானங்களை எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்கக் கூடாது. அவ்வப் போட்டித் தொடரின் கீழ் விளக்கப்பட்டுள்ளவாறு அப்போட்டிகளுக்காக நடுவர் சபை தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

- பெற்றுக்கொண்ட மொத்த பெறுபேறு ஆவணங்களுடன் அவ்வப் போட்டித் தொடருக்காக முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட குழு தொடர்பான விபரங்கள், பாடசாலையின் பெயர், முகவரி, வலயம், மாகாணம் என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு வலயப் போட்டியின் இறுதியில் வலயக் கல்விப் பணிப்பாளரினால் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

- மாகாணப் போட்டிகளின் இறுதியில் தேசிய போட்டிக்காகப் பங்கேற்கும் குழு தொடர்பான தகவல்கள் மற்றும் பரிந்துரைகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களுக்கு அமைய (தேசிய கணித அறிவுக் களஞ்சியப் போட்டித் தொடருக்காக மாதிரிப் படிவ இல. 1 மற்றும் தேசிய கணித நாடகப் போட்டித் தொடருக்காக மாதிரிப் படிவ இல. 2) பூர்த்தி செய்து பணிக்கப்பட்டுள்ள இறுதித் தினத்திற்கு முன்னர் கல்விச் செயலாளரினால், மேலதிக செயலாளர் (கல்வி பண்புசார் விருத்தி) மூலம் கல்விப் பணிப்பாளர், கணிதக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய,

பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பதல் வேண்டும். அவ்வாறு சரியான முறையில் உரிய தினத்திற்கு முன்னர் உரிய தகவல்களை அனுப்பாத போட்டிக் குழுக்களுக்கு தேசிய கணிதப் போட்டியில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படமாட்டாது.

## 2.2. தேசிய கணித அறிவுக்களஞ்சியப் போட்டித் தொடர்

### 2.2.1. தேசிய கணித அறிவுக் களஞ்சியப் போட்டித் தொடரின் விசேட நோக்கங்கள்

1. விசேட திறன் கொண்டோரை இனங்கண்டு சர்வதேச சமூகத்தின் கணிதத்துறையில் கௌரவமான இடத்தினை உருவாக்குவதற்கான இயலுமைகளை விருத்தி செய்தல்.
2. கணிதப் பாட அறிவு தொடர்பில் ஆசிரியர், மாணவர், பெற்றோரின் அறிவு விருத்திக்கான சந்தர்ப்பத்தினை உருவாக்குதல்.
3. மாணவர்கள் மத்தியில் கணித பாடத்திற்குரிய இயலுமைகளை வெளிப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

### 2.2.2. தேசிய கணித அறிவுக்களஞ்சியப் போட்டித் தொடரின் நிபந்தனைகள்

#### 2.2.2.1. போட்டி நிகழ்ச்சிகள்

கனிஷ்ட பிரிவு மற்றும் சிரேஷ்ட பிரிவு என்ற அடிப்படையில் தனித்தனியாக இரு போட்டிகள் நடைபெறும். இருப்பினும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல நிகழ்ச்சிகள் வேறுபடுத்தப்படுவதில்லை என்பதுடன் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியினைப் பிரதிநிதித்துவப்படுத்தவதற்கு இரு மொழிகளிலும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

#### 2.2.2.2. பங்கேற்பு

| போட்டிப் பிரிவுகள் | போட்டியில் பங்கேற்கும் குழுவுக்குரிய மாணவர் எண்ணிக்கை | மாணவர்கள் அடங்கும் தரம் | அவ்வத் தரங்களின் குழுக்களுக் குரிய மாணவர் எண்ணிக்கை | குழுவில் பங்கேற்கும் மேலதிகமாக மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கனிஷ்ட | 6 | 6 | 2 | 1 |
| | | 7 | 2 | 1 |
| | | 8 | 2 | 1 |
| சிரேஷ்ட | 6 | 9 | 3 | 1 |
| | | 10 | 3 | 1 |

அட்டவணை இல. 1 : அவ்வத் தரங்களின் கீழ் கணித அறிவுக்களஞ்சிய போட்டி நிகழ்ச்சிக்காக மாணவர்களின் பங்கேற்பு

- வலய மட்டத்தில் கணித வினா விடைப் போட்டித் தொடருக்காக பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்தி குழு பங்கேற்ற போதிலும் மாகாண மட்டத்தில் கணித வினா விடை போட்டித் தொடருக்காக ஒரு பாடசாலைக்கு வரையறுக்காது வலயத்தினைப் பிரதிநித்துவப்படுத்தும் குழு அடிப்படையில் பங்கேற்க முடியும். அத்துடன் தேசிய மட்டத்தில் வினா விடைப் போட்டித் தொடருக்காக ஏதேனும் ஒரு பாடசாலைக்கு அல்லது வலயத்தினைப் பிரதிநிதித்துவப்படும் குழு கூடுதலான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் கொண்ட குழு போட்டியில் பங்கேற்கச் செய்ய முடியும்.

- ஏதேனும் ஒரு குழுவுக்கு உரிய மாணவருக்கு நடுவர் சபையினால் ஏற்றுக்கொள்ளும் காரணங்களுக்கு அமைய போட்டியில் பங்கேற்கக் கூடிய சந்தர்ப்பத்தில் பதிலீடாக மேலதிக மாணவர்களையும் தயார்படுத்த வேண்டும்.

- சகல பிள்ளைகளுக்கும் உரிய ஆண்டில் அட்டவணை இல. 1 இற்கமைய உரிய தரத்தில் கல்வி கற்பதாக உரிய அதிபரின் உறுதிப்பத்திரம் மாகாண இணைப்பு உத்தியோகத்தர் மூலம் நடுவர் சபைக்கு தேசிய போட்டியை ஆரம்பிக்கும் முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

2.2.2.3. போட்டி நடைபெறும் முறைக்குரிய நிபந்தனைகள்

- முதலாம் கட்டத்திற்கு 8 குழுக்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒவ்வொன்றுக்கும் மாற்றமான சந்தர்ப்பங்களில் ஒரே சந்தர்ப்பத்தில் மற்றும் சமமான கணித அறிவுக்களஞ்சிய வினாக் கொத்து மூலம் அவ்வவ் மாகாணத்திற்கு வருகை தரும் குழுவிற்கு வழங்கி வாய்மூல பதில் நடுவர் சபையினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். இத்தெரிவு பரிசோதனையின் போது கேள்விகளைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு இல்லை என்பதுடன் பதிலளிப்பதற்காக ஒரு நிமிட கால அவசகாம் வழங்கப்படும். பதிலளிக்க முடியாத சந்தர்ப்பத்தில் வேறொருவருக்கு பதிலளிப்பதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. குறைந்த புள்ளிகளைப் பெறும் குழு போட்டித் தொடரில் இருந்து நீக்கப்படும். இத்தெரிவுப் போட்டியின் புள்ளிகள் இறுதிப் போட்டியுடன் தொடர்புபட்டதல்ல.

- எஞ்சும் 8 குழுக்கள் இறங்கு வரிசையின் புள்ளித்தொடருக்கு அமைய 1 தொடக்கம் 8 வரையான இடங்களுக்கு இலக்கமிட்டு (1, 5) ; (2, 6) ; (3, 7) மற்றும் (4, 8) என்ற அடிப்படையில் குழு சோடி அடிப்படையில் முதலாம் போட்டியில் கட்டத்தினை ஒரே சந்தர்ப்பத்தில் நான்கு இடங்களில் நடைபெறும். முதலாவது போட்டியில் தோல்வியடையும் குழு போட்டித் தொடரில் இருந்து நீக்கப்படும் என்பதுடன் வெற்றியீட்டும் அணி இறங்கு வரிசைப் புள்ளிகளுக்கு அமைய 1 – 4 வரையான இலக்கமிட்டு (1, 3) மற்றும் (2, 4) என்ற அடிப்படையில் மீள சோடி அடிப்படையில் இரண்டாங்கட்டப் போட்டி ஒரே சந்தர்ப்பத்தில் இரு இடங்களில் நடைபெறும்.

- இரண்டாவது கட்டத்தில் வெற்றியீட்டும் இரு குழுக்கள் மற்றும் தோல்வியடையும் இரு குழுக்களுக்கிடையே மேற்கொள்ளப்படும் மூன்றாவது கட்டப் போட்டி ஒரே சந்தர்ப்பத்தில் இரு இடங்களில் நடைபெறும். இதன் போது இரண்டாம் கட்டத்தில் வெற்றியீட்டும் இரு குழுக்களுக்கு இடையிலான போட்டியில் வெற்றியீட்டும் குழு முதலாம் இடத்திற்கும் தோல்வியடையும் குழு இரண்டாம் இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும். இரண்டாம் கட்டத்தின் கீழ் தோல்வியடைந்த இரு குழுக்களுக்கு இடையிலான போட்டியில் வெற்றியீட்டும் அணி மூன்றாவது இடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும்.

- போட்டிக்கான குழுவில் பிள்ளைகள் கீழ் மட்டத்தில் உள்ள தரத்தில் இருந்து உயர் மட்டத்தில் உள்ள தரம் வரையில் ஆசனங்களில் அமரச் செய்யப்படுவர்.

- ஒரு போட்டியின் போது அவ்வத் தரங்களுக்குப் பொருத்தமானவாறு ஒரு சுற்றில் ஒரு அணிக்கு 6 கேள்விகள் வீதம் வழங்கப்படும். (அவ்வாறு இரு சுற்றுக்கள் வீதம் இடம்பெறும்)

- போட்டியின் ஆரம்பத்தில் கேள்வியினைத் தேர்ந்தெடுப்பதற்காக சீட்டிழுப்பு நடாத்தப்படும்.

- முதலில் கேள்வியினை வழங்கும் குழு நாணயச் சுழற்சியின் மூலம் தேர்ந்தெடுக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் சுற்றில் மற்றைய அணிக்கு முதல் சந்தர்ப்பம் உரித்தாகும்.

- உரிய போட்டியாளர்களுக்கு கேள்விகள் கீழ் தரத்தில் இருந்து மேல் தரம் வரையான தொடருக்கு அமைய வழங்கப்படும்.

- ஒரு கேள்வி ஒரு மொழி மூலம் உயர்ந்தபட்சம் இரண்டு முறை வாசிக்கப்படும். (தேவைக்கு ஏற்றவாறு கேள்விகள் சிங்களம் / தமிழ் மொழி மூலம் வழங்கப்படும்)

- உரிய போட்டியாளர்களுக்கு பதிலளிப்பதற்கான நேரம் 60 வினாடிகள் இரு முயற்சிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சரியான பதிலுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும். பதில் தவறாக இருப்பின் அவ்வணியின் உரிய தரத்தில் வேறொருவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். நேரம் 15 வினாடிகள் ஆகும். இதன் ஒரு சந்தர்ப்பம் மாத்திரமே வழங்கப்படும். பதில் சரியாயின் 5 புள்ளிகள் வழங்கப்படும்.

- அப்பதில் பிழையாயின் கேள்வி எதிரணிக்கு வழங்கப்படும். நேரம் 15 வினாடிகள் ஆகும். ஒரு முயற்சியில் விடையளிப்பதாயின் 5 புள்ளிகள் வழங்கப்படும். கீழ் மட்ட தரத்தில் போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் கேள்விக்காக எச்சந்தர்ப்பத்திலும் உயர் தரத்தின் போட்டியாளர்களின் பதில்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேற்தரத்தில் உள்ள போட்டியாளர்களின் கேள்விகளுக்கு கீழ் தரத்தில் உள்ள போட்டியாளர்களின் விடை ஏற்றுக்கொள்ளப்படும்.

- இரண்டு சுற்றுக்களின் இறுதியிலும் இரு குழுக்களும் சமமான புள்ளிகளைப் பெறும் பட்சத்தில் வெற்றியினை வழங்குவதற்காக ஒரே தடவையில் இரு சோடி கேள்விகள் வீதம் குறைந்தபட்ச கேள்விச் சோடிகள் மேற்தரத்தில் உள்ள போட்டியாளர்களுக்கு வழங்கப்படும்.

- நடுவர் சபை மூன்று அங்கத்தவர்களைக் கொண்டமைந்துள்ளதுடன் அவர்கள் கணித பாடத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர் அல்லது ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களாகவும் இருத்தல் வேண்டும்.

### 2.2.3. தேசிய கணித அறிவுக்களஞ்சியப் போட்டித் தொடரின் நேர அட்டவணை

கீழ்க்குறிப்பிடப்பட்ட கால எல்லையினைத் தாண்டாதவாறு உரிய போட்டிகள் நடாத்தப்படுதல் வேண்டும்.

| போட்டித் தொடர் | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| கணித அறிவுக் களஞ்சியம் | மே / ஜூன் | ஜூன் / ஜூலை | செப்டெம்பர் |

அட்டவணை இல. 2 – தேசிய கணித அறிவுக்களஞ்சியப் போட்டித் தொடர் நடாத்தப்படும் கால எல்லை

2.2.4. தேசிய கணித அறிவுக்களஞ்சிய வெற்றியாளர் குழுக்களுக்கான பரிசில்கள்

- முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றுக் கொள்ளும் குழுக்களின் சகல போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்களும் குழுக்களுக்குரிய வெற்றிகளைக் குறித்துக்காட்டும் பதக்கங்களும் வழங்கப்படும்.

- முதலாவது, இரண்டாவது. மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொள்ளும் குழுக்களின் போட்டிகளில் பங்கேற்காத மேலதிக போட்டியாளர்களுக்கும் மற்றும் தேசிய போட்டித் தொடருக்காகப் பங்கேற்கும் ஏனைய குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் போட்டியாளர்களுக்கும் பங்கேற்புக்காக மாத்திரம் சான்றிதழ் வழங்கப்படும்.

## 2.3. தேசிய கணித நாடகப் போட்டித் தொடர்

### 2.3.1. தேசிய கணித நாடகப் போட்டித் தொடரின் விசேட நோக்கங்கள்

1. கணித சிந்தனைகள், தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு கணிதத்தினை அழகியல் அடிப்படையில் முன்வைக்க ஆர்வமூட்டல்.

2. மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும் மற்றும் இசைக்கலைகளை காண்பிப்பதன் மூலம் கடினமான கணித செயற்பாடுகளை இலகுவில் உறுதி செய்வதற்காக புதிய முறைகளை அறிமுகப்படுத்தல்.

3. இலவச அழகியல் பின்னணிகள், சுவையான, களியாட்ட, கூட்டு கணிதக் கற்றலுக்காக மாணவர்களை ஆர்வமூட்டல்.

4. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஆக்கத்திறன் மீது ஆர்வமூட்டி அவர்களின் கணித ஆக்கத்திறன்களை விருத்தி செய்தலும் இயலுமைகளை மேம்படுத்தலும்.

5. கணித சிந்தனைகளை மாணவர்கள் மத்தியில் உறுதி செய்வதற்காக பல்வேறுபட்ட ஆக்க முறைகளைப் பரீட்சார்த்திப்பதற்காக ஆசிரியர்களை ஆர்வமூட்டல்.

### 2.3.2. தேசிய கணித நாடகப் போட்டித் தொடருக்கான நிபந்தனைகள்

#### 2.3.2.1. போட்டி நிகழ்ச்சிகள்

கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுக்காக தனித்தனியானதும் சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழிக்காக தனித்தனியாகவும் நான்கு நிகழ்ச்சிகளின் கீழ் போட்டிகள் நடைபெறும்.

2.3.2.2. பங்கேற்பு

| போட்டி நிகழ்ச்சி / மொழி | கனிஷ்ட பிரிவுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட தரங்கள் | சிரேஷ்ட பிரிவுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட தரங்கள் |
|---|---|---|
| கணித நாடகம் சிங்கள மொழி | 6, 7, 8, 9 | 6 தொடக்கம் 13 வரை |
| கணித நாடகம் தமிழ் மொழி | 6, 7, 8, 9 | 6 தொடக்கம் 13 வரை |

அட்டவணை இல. 3 – அவ்வத் தரங்களின் கீழ் கணித நாடகப் போட்டி நிகழ்ச்சிக்காக மாணவர்களின் பங்கேற்பு

- இசை நாடகத்தில் ஒரு கட்டத்துக்காக பங்கேற்க வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்தபட்சம் 15 ஆக இருத்தல் வேண்டும். அதற்காக அட்டவணை இல. 3 இற்கு அமைய பாடசாலை மாணவர்களை மாத்திரம் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

- நாடகத்திற்கு மேலதிகமாக பின்னணிப் பாடல், வாத்தியங்கள் வழங்குவதாயின் அதற்கு மேலதிகமாக உயர்ந்தபட்சம் 10 பேர்கள் பங்கேற்க முடியும். அவ்வாறாயின் நாடகத்தினைத் தவிர்ந்த அது சார்ந்த செயற்பாடுகள் (பின்னணிப் பாடல்கள் மற்றும் வாத்தியங்கள்) இற்காக பங்கேற்கும் சிரேஷ்ட எல்லையினை 6, 13 ஆந் தர மாணவர்கள் மற்றும் அதற்கு மேலதிகமாக அப்பாடசாலையின் ஆசிரியர்களின் பங்கேற்பினைப் பெற்றுக்கொள்ள முடியும். அதுசார்ந்த செயற்பாடுகளுக்காக தமது கல்வி வலயத்தில் அமைந்துள்ள அரசின் ஏனைய பாடசாலைகளில் இருந்தும் ஆசிரியர்களின் பங்கேற்பினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- தேசிய மட்டம் வரையில் சகல கட்டங்களிலும் சமர்ப்பிக்கப்படும் சகல குழுக்களும் ஏதேனும் ஒரு பாடசாலையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவாக போட்டியில் பங்கேற்க வேண்டும்.

- குழுவாகப் பங்கேற்கும் சகல மாணவ மாணவிகளும் பாடசாலையில் உரிய தரத்தில் கல்வி பயில்வதாக அதிபரினால் உறுதிப்படுத்தி மாகாண இணைப்புக் குழுவினால் நடுவர் சபைக்கு தேசிய போட்டிகள் ஆரம்பிக்கும் முன்னர் பங்கேற்கச் செய்யப்படுதல் வேண்டும்.

2.3.2.3. போட்டிகள் நடைபெறும் முறைகளுக்குரிய நிபந்தனைகள்

- நாடகம் மற்றும் இசையில் குறிப்பிடப்பட்டுள்ள முழு நேரம் 15 நிமிடங்களை விடக் குறையாதும் 20 நிமிடங்களை விட மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

- நாடகத்தின் அடிப்படை அம்சமாக அமைய வேண்டியது கணிதப் பாடத்துக்குரிய செயற்பாடுகளைச் சித்தரித்துக் காட்டுவதாகும்.

- ஏதேனும் ஒரு வலயத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள அல்லது தமிழ் மொழி மூலம் ஒன்றை விட மேற்பட்ட தடவைகளில் பங்குகொள்ளாத சந்தர்ப்பத்தில் பங்கேற்கும் அணி போட்டியின்றி மாகாண மட்டத்திலான போட்டியில் பங்கேற்க முடியும்.

- நடுவர் சபை 3 பேர்களைக் கொண்டு அமைந்திருக்க வேண்டியதுடன் குறைந்தபட்சம் கணிதப் பாடம் தொடர்பாக தேர்ச்சிமிக்க உத்தியோகத்தர்கள் மற்றும் நாடகக் கலை தொடர்பான நிபுணர்களைக்

கொண்டமைந்திருத்தல் வேண்டும். இவர்கள் தற்போது அரச சேவையில் உள்ள அல்லது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

- சகல போட்டிகளும் மாணவர்கள் அணிந்திருக்கும் உடைகள் பாடசாலை, பாடசாலை முறைமைக்கு மற்றும் உள்நாட்டுப் பெறுமதிகளுக்கு ஏற்றவாறு அமைந்திருத்தல் வேண்டும். இவை மாணவர்களின் சுய கௌரவத்தினைப் பாதுகாக்கக் கூடியதாகவும் மாணவர்களின் ஒழுக்க விழுமியத்திற்கு ஏற்றவாறான முறையிலும் அமைந்திருத்தல் வேண்டும். தேவையற்றவாறு உடம்பினைக் காண்பிக்காதவாறு அவை தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எந்தவொரு சமயம், இனம், நபர்களையோ இழிவுபடுத்தக் கூடியவாறான முறையில் அமைந்திருக்கக் கூடாது. அவ்வாறு செயற்படாத குழுக்கள் போட்டியில் இருந்து நீக்கப்படும். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான முழுப் பொறுப்பினையும் அதிபர்கள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

### 2.3.3. தேசிய கணித நாடகப் போட்டித் தொடரின் மதிப்பீடுகள்

கீழுள்ள ஒப்பளவுகளின் கீழ் நாடகங்களின் ஆக்கங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

- நாடக ஆக்கத்தின் ஊடாக கணித சிந்தனைகள் சிறந்த முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் - (புள்ளிகள் 15)
- அக்கணித சிந்தனைகள் ஆக்க ரீதியாக வெளிப்படுத்தப்பட்டிருத்தல் - (புள்ளிகள் 25)
- நடனத்தின் தரம் உயரிய மட்டத்தில் பேணப்படல் - (புள்ளிகள் 20)
- ஏனைய பின்னணிகள் நாடகத்தின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்தல் - (புள்ளிகள் 20)
- நாடகத்தின் முழுமையான இணைப்பு மற்றும் போட்டி நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் - (புள்ளிகள் 20)

மொத்தம் - (புள்ளிகள் 100)

### 2.3.4. தேசிய கணித நாடகப் போட்டித் தொடருக்கான நேர அட்டவணை

| போட்டித் தொடர் | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| கணித நாடகம் சிங்கள மொழி<br>கணித நாடகம் தமிழ் மொழி | மே / ஜூன் | ஜூன் / ஜூலை | ஒக்டோபர் |

அட்டவணை இல. 4 – தேசிய கணித நாடகப் போட்டித் தொடர் நடைபெறும் கால எல்லை

### 2.3.5. தேசிய கணித நாடகப் போட்டித் தொடரில் வெற்றியீட்டும் குழுக்களுக்கான வழங்கல்கள்

- முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொண்ட குழுக்களின் நாடகம் மற்றும் அது சார்ந்த செயற்பாடுகளுக்காக பங்கேற்ற சகல அங்கத்தவர்களுக்கும் சான்றிதழ்களும் குழுக்களுக்காக உரிய வெற்றிக்கேடயங்களும் வழங்கப்படும்.

- தேசிய போட்டித் தொடருக்காகப் பங்கேற்கும் ஏனைய குழுக்களின் சகல அங்கத்தவர்களுக்கும் பங்கேற்புச் சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்படும்.

3.0. தேசிய கணிதப் போட்டித் தொடருக்காக உணவு, பானங்கள் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குதல்

தேசிய மட்டத்தில் போட்டிகள் நடைபெறும் தினங்களில் போட்டிக்காக பங்கேற்கும் குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் அவர்களுக்குப் பொறுப்பாகவரும் ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக உணவு, பானங்கள் மற்றும் தங்குமிட வசதிகள் மாத்திரம் கல்வி அமைச்சினால் வழங்கப்படும்.

4.0. ஒதுக்கீடுகள்

வலய மட்டத்தில் மற்றும் மாகாண மட்டத்திலான போட்டிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்துவதும், தேசிய மட்டத்திலான போட்டிக்காக குழு பங்கேற்பதற்காகத் தேவையான ஏற்பாடுகள் மாகாணத்தின் பாட விருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் மூலம் வழங்கப்படுதல் வேண்டும்.

இப்போட்டியினை நடாத்துவதற்கான பிரதான நோக்கமாக அமைவது கணிதப் பாடத்தினை விருப்பத்திற்குரியதாக மாற்றியமைத்து மாணவர்களின் கணித அடைவு மட்டத்தினை மேம்படுத்துவது என்பதனால் மாகாணத்தின் பாடவிருத்தி இலக்குகளுக்கு அமைவாக திட்டமிட்டு மற்றும் சிறந்த மேற்பார்வையுடன் இப்போட்டிகளை வெற்றிகரமாக்குவதற்காக மாகாண கல்விச் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் முழுமையான அனுசரணையினைத் தேவையானவாறு பெற்றுக்கொள்ள வேண்டும்.

5.0 இப்போட்டியில் பங்கேற்கும் சகல போட்டியாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்கள் அனைவரும் சகல சந்தர்ப்பத்திலும் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமையச் செயற்படுவதற்கும் நடுவர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானம் என்பதனையும் ஏற்றுக்கொள்வதற்கு இணங்குதல் வேண்டும்.

இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அல்லது எல்லைகளுக்குப் புறம்பாகச் செயற்படுவதாக ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரியவரும் பட்சத்தில் பெறுபேறு ஆவணங்களிலிருந்து அக்குழுவினை நீக்குவதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட ஏனைய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் கல்வி அமைச்சுக்கு அதிகாரம் உண்டு.

எஸ்.எம். கோடாபய ஜயரட்ண,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

S. M. GOTABAYA JAYARATHNE
Secretary
Ministry of Education
"Isurupaya"
Battaramulla.

# தேசிய கணிதப் போட்டித் தொடர்

## தேசிய கணித வினா விடைப் போட்டித் தொடர் - 20.....

(மாகாணத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு தொடர்பான தகவல்கள்)

1. மாகாணம் -
2.

2.1 கனிஷ்ட பிரிவு (தரம் 6,7,8)
(சான்றிதழில் குறிப்பிடப்பட வேண்டிய முழுப்பெயர் மற்றும் பாடசாலையினைச் சரியாகக் குறிப்பிடவும்)

| தரம் | மாணவரின் பெயர் | பாடசாலை | கல்வி வலயம் |
|---|---|---|---|
| 6 | | | |
| | | | |
| 7 | | | |
| | | | |
| 8 | | | |
| | | | |
| மேலதிக போட்டியாளர்கள் | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |

2.2 சிரேஷ்ட பிரிவு (தரம் 9,10)

| தரம் | மாணவரின் பெயர் | பாடசாலை | கல்வி வலயம் |
|---|---|---|---|
| 9 | | | |
| | | | |
| | | | |
| 10 | | | |
| | | | |
| | | | |
| மேலதிக போட்டியாளர்கள் | | | |
| 9 | | | |
| 10 | | | |

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன்.

....................................
மாகாண கணித இணைப்பு உத்தியோகத்தர்

................................
திகதி

- மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை

மாகாண கணித பாட இணைப்பு உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட தகவல்களுக்குரிய குழு தேசிய போட்டிக்காக பங்கேற்கப் பொருத்தமானது எனப் பரிந்துரை செய்கிறேன்.

................................................
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

.................................
திகதி

கனிஷ்ட பிரிவு மற்றும் சிரேஷ்ட பிரிவாக சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் தனித்தனியாக இம்மாதிரிப் படிவத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| கனிஷ்ட பிரிவு (சிங்களம்) | |
| கனிஷ்ட பிரிவு (தமிழ்) | |
| சிரேஷ்ட பிரிவு (சிங்களம்) | |
| சிரேஷ்ட பிரிவு (தமிழ்) | |

உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக

## தேசிய கணிதப் போட்டித் தொடர்
## தேசிய கணித நாடகப் போட்டித் தொடர் - 20.....

(மாகாணத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு தொடர்பான தகவல்கள்)

1. மாகாணம் - 1.1. வலயம் -
2. பாடசாலை -
3. நாடகத்தின் பெயர் - 3.1. மொழி -
4. நாடகப் பிரிவு -
5. பங்கேற்கும் குழு -

5.1

| | | மாணவரின் பெயர் | தரம் |
|---|---|---|---|
| நாடக நடனக் குழு (முழுப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்) நாடகத்தில் பங்பேற்போர் மாத்திரம் | 1 | | |
| | 2 | | |
| | 3 | | |
| | 4 | | |
| | 5 | | |
| | 6 | | |
| | 7 | | |
| | 8 | | |
| | 9 | | |
| | 10 | | |
| | 11 | | |
| | 12 | | |
| | 13 | | |
| | 14 | | |
| | 15 | | |

5.2

2

| | | பங்கேற்போரின் பெர் | பதவி (மாணவர் / ஆசிரியர் போன்றோர்) | மாணவரின் பெயர், தரம் |
|---|---|---|---|---|
| நாடகத்தில் பங்கேற்காத பின்னணிப் பாடல் மற்றும் வாத்தியக் குழு | 1 | | | |
| | 2 | | | |
| | 3 | | | |
| | 4 | | | |
| | 5 | | | |
| | 6 | | | |
| | 7 | | | |
| | 8 | | | |
| | 9 | | | |
| | 10 | | | |

6. நாடகத்தில் சித்தரித்துக் காட்டப்படும் விடயங்கள் தொடர்பான தகவல்கள்

i. தயாரிப்பு -
ii. பிரதியாக்கம் -
iii. இசை -
iv. பின்னணி ஆக்கம் -
v. ஆடை ஆக்கம் -

7. இத்துடன் நாடகப் பிரதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா ஆம் / இல்லை
(கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்)

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துவதன் மூலம் மாகாணப் போட்டிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய போட்டிக்கு பங்கேற்கவுள்ள நாடகத்தின் பிரதிகள் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துகிறேன்.

.....................................
மாகாண கணித விடயத்துக்குப் பொறுப்பான
இணைப்பு உத்தியோகத்தர்

.............................
திகதி

- மாகாணக் கல்விப் பணிப்பாளரின் உறுதியுரை

மாகாண கணித பாடத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட தகவல்களுக்கு அமைய, மாகாணத்தின் (தேவையற்ற சொற்களை நீக்கவும்) கனிஷ்ட சிங்களம் / கனிஷ்ட தமிழ் / சிரேஷ்ட சிங்களம் / சிரேஷ்ட தமிழ் பிரிவுக்காக முதலிடத்தினை வென்ற நாடகத்தின், அதாவது இத்துடனுள்ள கையெழுத்துப் பிரதிக்குரிய நாடகத்தினை தேசிய போட்டிகளில் முன்வைக்கப் பொருத்தமதானது எனப் பரிந்துரைக்கிறேன்.

...................................................
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

.................................
திகதி